சொன்னால், அதைச் செய்து தருவதற்கு பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 112, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

112—

நீர் மின் திட்டம்

***5554—திரு. சி. சந்திரசேகரன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலையில் நீர் மின் திட்டம் துவக்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) *மற்றும்* (ஆ) *கொல்லிமலையில் 1 X 20 மெகா வாட் மின்சாரம் தயாரிப்பதற்கான ஆணை வழங்கப்பட்டு, இடம் கையகப்படுத்துகின்ற பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கூடிய விரைவில் பணிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன் அவர்கள்.*

திரு. சி. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்கின்ற தாரக மந்திரத்தோடு, அமைதி, வளம், வளர்ச்சி என்ற நிலையில், தமிழக மக்களுக்காக 24 மணி நேரத்தில், 18 மணி நேரம் அல்லும் பகலும் அயராது உழைத்து, தமிழகத்தை முன்னேற்றப் பாதையில்*

கொண்டு சென்றும், தமிழக மக்களை வாழ வைத்துவிட்டு, இன்று நம்மிடத்திலேயிருந்து பிரிந்து சென்றாலும், நம்முடைய மக்கள் மனதில் என்றைக்கும் நீங்கா இடம் பெற்றிருக்கின்ற நம்முடைய இதய தெய்வம் அம்மா எனும் தெய்வத்தை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு அம்மா அவர்கள் என்னென்ன திட்டங்களையெல்லாம் தந்தார்களோ, அனைத்துத் திட்டங்களையும், அனைத்துப் பகுதிகளிலும் கொண்டு சேர்க்கின்ற வகையில், அயராது பாடுபட்டு, தினந்தோறும் 18 மணி நேரம் உழைத்து, பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற நம்முடைய தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாக நின்று பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற துணை முதல்வர் அண்ணன் அவர்களுக்கும், நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே இந்தக் கேள்வியைக் கேட்பதற்கு வாய்ப்பளித்த நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 10–15

இந்தக் கேள்வியினைப் பொறுத்தவரை, இந்தத் திட்டம் துவங்குவதற்கு முன்பாகவே என்னால் கேட்கப்பட்ட கேள்வி இது. இன்றைக்கு இந்தக் கேள்வி இங்கே வந்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, அந்தத் திட்டம் தொடங்கப்பட்டு, அதற்கான நிலங்கள் எடுக்கின்ற பணிகளெல்லாம் நடைபெற்று வருகின்றன. அந்த நிலங்களைப் பொறுத்தவரை, கொல்லிமலையில் அமைந்திருக்கின்ற அறப்பளீஸ்வரர் ஆலயத்திற்கு அருகே, கோயிலுக்குச் சொந்தமான நிலமும், மேலும், அரசு புறம்போக்கு நிலமும் இருக்கின்றது. தனியார் நிலங்களைப் பொறுத்தவரையில், ஒருசில இடங்களில் நில உரிமையாளர்களிடம் பேசி, கூடிய விரைவில் நிலத்தினைக் கையகப்படுத்தும் பணிகள் முடிவுற்று, விரைவாக அந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்திருக்கின்றார்கள். மேலும், இந்தத் திட்டத்தினைப் பொறுத்தவரை, திண்ணனூர்நாடு ஊராட்சி, ஊமையாறு பகுதியிலும், அறப்பளீஸ்வரர் ஆலயம் அருகே அமைந்திருக்கின்ற அசக்காடு ஆற்றின் அருகிலும், புளியஞ்சோலைப் பகுதியிலும்

தடுப்பணைகள் அமைத்து, அதாவது, அசக்காடு மற்றும் ஊமையாறு பகுதிகளில் தடுப்பணை அமைத்து, அதன் வாயிலாக புளியஞ்சோலைப் பகுதிக்கு நீர்மின் திட்டம்மூலம் மின்சாரம் கொடுக்கவிருப்பதாக அறிகிறேன். இந்த நீர்மின் திட்டத்தின் மூலமாக எடுக்கப்படுகின்ற மின்சாரத்தினை மலைப் பகுதி மக்களுக்கு வழங்கிவிட்டு, மீதமுள்ள மின்சாரத்தினை சமவெளிப் பகுதியில் உள்ள மக்களுக்கு வழங்க வேண்டும்.

அதுமாத்திரமல்லாமல், இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகின்ற நேரத்தில், இதற்காக அங்கே நிலங்கள் வழங்குகின்ற மலைப் பகுதி மக்களுக்கு அரசு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டும். மேலும், படித்த இளைஞர்களுக்கு அந்த அலுவலகத்தில் முன்னுரிமை அடிப்படையில் வேலைவாய்ப்பினையும் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்குத் தமிழகத்தை, இதய தெய்வம் அம்மா அவர்கள் மின்வெட்டு இல்லாத மாநிலமாக உருவாக்கி விட்டுச் சென்றிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களால் நியமிக்கப்பட்டு, அம்மா அவர்களின் வழியில் அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கும் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களும் இன்றைக்கு மின்வெட்டு இல்லாத மாநிலமாக தமிழகம் தொடர்ந்து விளங்கிடப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில், கொல்லிமலைப் பகுதியில் உள்ள படித்த இளைஞர்களுக்கு இத்திட்டத்தின்மூலம் உதவி செய்ய அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ளவாறு, அந்தத் திட்டம் புளியஞ்சோலைப் பகுதியில் ஆரம்பிக்கவில்லை. புளியஞ்சோலைப் பகுதி என்பது திருச்சி மாவட்டத்தில் இருக்கின்றது. நாமக்கல் மாவட்டத்தில்தான் அந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட இருக்கின்றது. கிட்டத்தட்ட 90 சதவிகிதம் நிலங்களைக் கையகப்படுத்துகின்ற பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான எஞ்சியுள்ள நிலங்களை எடுப்பதில்தான் சிறிது

காலதாமதமாகிக் கொண்டிருக்கின்றது. அதற்கான பணிகள் கூடிய விரைவில் முடிக்கப்பட்டு, திட்டப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இத்திட்டத்திற்காக பட்டா நிலங்களைக் கொடுத்தவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்க வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள். அந்த நடைமுறை ஏற்கெனவே இருக்கின்றது. அங்குள்ளவர்கள் மலைவாழ் மக்களாக இருக்கின்ற காரணத்தினால், நிச்சயமாக முன்னுரிமை அடிப்படையில் பணி வழங்கப்படும். யார், யாருடைய நிலம் அங்கே கையகப்படுத்தப்பட்டிருக்கின்றதோ, அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு அவர்களுடைய கல்வித் தகுதிக்கேற்ப வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னொரு கேள்வியையும் இங்கே கேட்டார்கள். அங்கே தயாரிக்கப்படவிருக்கின்ற மின்சாரத்தை முழுமையாக கொல்லிமலைக்கு கொடுத்தது போக, மற்ற பகுதிகளுக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அப்படியில்லை; மின்சாரம் தயாரிக்கின்றபோது, தமிழகத்தில் உள்ள இணைப்போடு இணைத்து, தேவையான அளவிற்கு வழங்கப்படும். மலைவாழ் பகுதிகளில் இப்போது மின்சாரத் தட்டுப்பாடே இல்லாமல் இருக்கிறது. தேவை இன்னும் அதிகமாக இருந்தால், உடனடியாக எவ்வளவு வேண்டுமானாலும் வழங்க இயலும். இப்போது மின் உற்பத்தி அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் வழங்கலாம். அங்கே முழுக்க முழுக்க விவசாயிகள் இருக்கின்ற காரணத்தினால் விவசாயத்திற்கு மின்சாரத்தை நாம் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மின்னழுத்தம் குறைவாக இருக்கிறது என்று ஏதாவது ஒரு பகுதியைக் குறிப்பிட்டுச் சொன்னால், அந்தப் பகுதியில் தேவையான நிலத்தைக் கண்டறிந்து அங்கே துணை மின் நிலையத்தை அமைத்து, சீரான மின்சாரம் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன் அவர்கள்.

திரு. சி. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்களைக் காப்பாற்றுகின்ற

அரசாங்கமாக அம்மா அவர்களுடைய அரசாங்கம் விளங்குகிறது. அதனடிப்படையில், இன்றைக்கு மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகின்ற நேரத்தில், அந்த மலைப் பகுதி மக்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வேலைவாய்ப்பு தருவதாக சொல்லியிருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு என்னுடைய பணிவான நன்றியினையும், வணக்கத்தினையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அரியூர்நாடு ஊராட்சி, மேட்டுக்கடை என்ற பகுதியில் துணை மின் நிலையம் அமைப்பதற்கான இடம் உள்ளது. எனவே, அந்தப் பகுதியில் துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை உடனடியாகப் பரிசீலித்து, அங்கு இடம் இருப்பின், மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஒப்புதலோடு, துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

முற்பகல் 10–20

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய திருவண்ணாமலை மாவட்டம், ஜமுனாமரத்தூரில் பீமன் நீர்வீழ்ச்சி என்ற ஒரு நீர்வீழ்ச்சி இருக்கிறது. அதிலே குளிப்பதற்குக்கூட போக முடியாத அளவிற்கு ஆழமாக இருக்கிறது. அதிக நாட்களுக்குத் தண்ணீர் வரக்கூடிய நிலை இருக்கின்ற காரணத்தால், அங்கே நீர் மின் நிலையம் அமைத்திட வாய்ப்புள்ளது. அந்தப் பகுதியிலே நீர் மின் திட்டத்தைச் செயல்படுத்திட ஏதுவாக காடுகள் நிறைந்த பகுதியாக அது இருக்கிறது. மத்திய அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்று, அங்கே அமைத்தால் அதிக அளவு மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும். இன்றைக்குத் திருவண்ணாமலை மாவட்டத்தில் சோலார் பவர்

அமைப்பினைப் போட்டால், அதற்கு மீட்டர் கொடுக்கமாட்டேன் என்கிறார்கள். மீண்டும் மின்சாரத்தை எடுத்துக்கொள்வதற்கு மீட்டர் இல்லையென்று சொல்லக்கூடிய நிலையிருக்கிறது. ஆகவே, சோலார் பவர் போடுவதற்கு மக்கள் ஆர்வமாக இருக்கிறார்கள். மரபுசாரா எரிசக்தியை உற்பத்தி செய்து புவி வெப்பமயமாவதைத் தடுத்திட வேண்டும். மரபுசாரா எரிசக்தி உற்பத்தியிலே சோலார் பவர் முக்கிய இடம் வகிக்கிறது. இன்றைக்குப் பேப்பர் அளவிலே போடக்கூடிய 'சோலார் பேனல்கள்', புதிய கண்டுபிடிப்புகள் எல்லாம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, அப்படிப்பட்ட சோலார் பவர் போடுகின்றவர்களுக்கு உடனடியாக meter கொடுத்து, அதிலிருந்து எடுக்கப்படும் மின்சாரத்தை அரசு கொள்முதல் செய்ய முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன ஜமுனாமரத்தூர் பகுதியில் உள்ள நீர்வீழ்ச்சியில் வருகின்ற நீரின் அளவு எவ்வளவு, வருடத்திற்கு எவ்வளவு நாட்கள் தண்ணீர் வரும் என்பதையெல்லாம் ஆய்வு செய்து, தண்ணீரினுடைய அளவு அதிகமாக இருக்குமென்று சொன்னால், மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு இதனை எடுத்துச் சென்று, பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இரண்டாவதாக, அவர் கேட்டது Net Meter என்று நினைக்கின்றேன். Net Meter-ஐப் பொறுத்தவரையில், இப்பொழுது கொடுத்துக்கொண்டிருக்கின்றோம். Meter shortage ஆக இருந்த காரணத்தினால்தான் காலதாமதமாகி விட்டது. இப்பொழுது meter வந்துகொண்டிருக்கின்றது. யாரெல்லாம் வீட்டிலே சூரிய மின்கூரை போடுகின்றார்களோ, அவர்களுக்கெல்லாம் meter வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 113, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. கோவிந்தராசு, மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.